**செ.வெ.எண்: 26** **நாள்: 11.11.2021**

**பெரம்பலூர் மாவட்டம்**

**தேசிய சட்டப் பணிகள் ஆணைக்குழு வெள்ளிவிழா சட்டப்பணிகள் பெருந்திரல் முகாமில் 78 பயனாளிகளுக்கு ரூ.1.13 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு தலைவர் மற்றும் முதன்மை மாவட்ட நீதிபதி திருமதி A.பல்கீஸ் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ப. ஸ்ரீவெங்கட பிரியா, இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் வழங்கினார்கள்.**

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் தேசிய சட்டப் பணிகள் ஆணைக்குழு வெள்ளிவிழா சட்டப்பணிகள் பெருந்திரல் முகாமில் 78 பயனாளிகளுக்கு ரூ.1.13 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு தலைவர் மற்றும் முதன்மை மாவட்ட நீதிபதி திருமதி A.பல்கீஸ் அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ப. ஸ்ரீவெங்கட பிரியா, இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் இன்று (11.11.2021) வழங்கினார்கள்.

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் தேசிய சட்டப் பணிகள் ஆணைக்குழு வெள்ளி விழா சட்டப்பணிகள் பெருந்திரல் முகாம் நிகழ்ச்சி மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு தலைவர் மற்றும் முதன்மை மாவட்ட நீதிபதி திருமதி A.பல்கீஸ் அவர்கள் தலைமையில் இன்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ப. ஸ்ரீவெங்கட பிரியா, இ.ஆ.ப., அவர்கள், நிரந்தர மக்கள் நீதி மைய தலைவர் / கூடுதல் அமர்வு நீதிபதி திரு S. கிரி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு S.மணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்ச்சியில் பல்வேறு அரசுத் துறைகளின் சார்பில் 78 பயனாளிகளுக்கு ரூ.1,13,13,000 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை முதன்மை மாவட்ட நீதிபதி திருமதி பல்கீஸ் அவர்களும், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ப. ஸ்ரீவெங்கட பிரியா, இ.ஆ.ப., அவர்களும் வழங்கினார்கள்.

**இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசியதாவது:**

தேசிய சட்டப் பணிகள் ஆணைக்குழு வழிகாட்டுதலுக்கு இணங்க பெரம்பலூர் மாவட்டத்தில் சட்டப்பணிகள் பெருந்திரல் முகாம் சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது. நீதித்துறையின் ஒத்துழைப்புடன் பொதுமக்களுக்கு சட்டம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன் பல்வேறு துறைகளின் மூலம் நலத்திட்ட உதவிகள் வழங்குவது தொடர்பாகவும் இங்கு சிறப்பு முகாம்கள் அமைக்கப்பட்டது. இங்கு வருகை தந்துள்ள அனைவரும் அரசின் திட்டங்களை தெரிந்து அவைகளை உங்கள் நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் எடுத்துச்சொல்லி அவர்களும் சட்ட விழிப்புணர்வு மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் பெறுவது தொடர்பாக தெரிந்துகொள்ள உதவிட வேண்டும். மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் அனைத்து துறை அலுவலர்கள் குறித்த விபரங்கள் தொலைபேசி எண்களுடன் கையெடு தயாரிக்கப்பட்டு சட்டப் பணிகள் ஆணைக் குழுவினருக்கு வழங்கப்பட உள்ளது இலவச சட்ட முகாமிற்கு பல்வேறு கோரிக்கைகளுக்காக வருகை தரும் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் எளிதில் சென்றடைய நடவடிக்கை எடுக்கப்படும் என பேசினார்.

**இந்நிகழ்ச்சியில் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு தலைவர் / முதன்மை மாவட்ட நீதிபதி அவர்கள் பேசியதாவது:**

பெரம்பலூர் மாவட்டத்தில் தேசிய சட்டப் பணிகள் ஆணைக் குழுவின் உத்தரவின்படி சட்ட விழிப்புணர்வு முகாம்கள் சட்டப்பணிகள் பெருந்திரல் முகாம்கள் கிராமங்கள்தோறும் நடத்தப்பட்டு வருகிறது. கடந்த 45 தினங்களாக மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் பல்வேறு துறைகளின் ஒத்துழைப்புடன் சிறப்பாக விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டது. இலவச சட்ட உதவி மையங்கள் மூலம் மக்களுக்கு பல்வேறு சட்ட நுணுக்கங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. கிராமப்புற மக்களுக்கு சேவை ஆற்றிடும் வகையில் இம்மையம் செயல்படுகிறது. சட்ட பணிகள் குறித்து ஆண்டு முழுவதும் நீதிமன்ற வளாகத்தில் இலவச சேவை மையம் நடத்தப்பட்டு வருகிறது இங்கு வருகின்ற பொதுமக்களுக்கு சட்ட உதவிகள் மட்டுமின்றி அரசின் நலத்திட்ட உதவிகளையும் பெறுவதற்கு உதவி செய்யப்படுகிறது அனைவரும் சட்ட விழிப்புணர்வு மற்றும் அரசின் நலத்திட்டங்களை தெரிந்துகொள்ளும் வகையில் மாவட்ட நிர்வாகத்தின் ஒத்துழைப்புடன் இன்று பெருந்திரல் முகாம் சிறப்பாக மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடத்தப்பட்டுள்ளது. இங்கு சொல்லப்பட்டுள்ள கருத்துக்களை நீங்கள் அனைவரும் மற்றவர்களுக்கும் எடுத்துச் சொல்லி அவர்களும் விழிப்புணர்வு பெற உதவிட வேண்டும் என பேசினார்.

முன்னதாக பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் பல்வேறு துறைகளின் சார்பில் அரசின் நலத்திட்ட உதவிகள் குறித்து அமைக்கப்பட்டிருந்த கண்காட்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு தலைவர் / முதன்மை மாவட்ட நீதிபதி அவர்கள் ஆகியோர் பார்வையிட்டனர்.

இந்நிகழ்வுகளில் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி ந.அங்கையற்கன்னி, வருவாய் கோட்டாட்சியர் திருமதி நிறைமதி சந்திரமோகன், சார்பு நீதிபதி செயலாளர் (மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு) திருமதி லதா, இணை இயக்குநர் திரு.கருணாநிதி, மேலாளர்(தாட்கோ) திருமதி ஷியமலா உள்ளிட்ட நீதிமன்ற பணியாளர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், பெரம்பலூர் மாவட்டம்.**